සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**தென்மாகாண கல்வி அமைச்சு, தென் மாகாண சபையின் பாடசாலைகளில் நிலவும்**
**ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை ஆட்சேர்த்தல் - 2016**

Recruitment of Graduates for the Teacher Vacancies exist in Schools in the Southern Provincial Council, Southern Provincial Ministry of Education - 2016


**(02) பொது அறிவு**
General Knowledge

ஒரு மணித்தியாலம்
One hour

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

**மிக முக்கியம் :**

**விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**



✳ **விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.**

**1 2 3 4**

**உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் பக்கத்திலும் எழுதுக.**

....................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

....................................
நோக்குனரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம்:**

✳ இவ்வினாத்தாள் **06** பக்கங்களில் **50** வினாக்களைக் கொண்டுள்ளது.

✳ விடைகளை எழுதமுன் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.

✳ **எல்லா** வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.

✳ இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **ஒரு மணித்தியாலம்** ஆகும்.

✳ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

✳ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

✳ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்

✳ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

✳ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றமாகும்.

✳ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

www.uplankajobs.lk

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 9 | |
| 3 | 10 - 19 | |
| 4 | 20 - 28 | |
| 5 | 29 - 39 | |
| 6 | 40 - 50 | |
| மொத்தம் | | |

**இறுதிப்புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக் 2 ஐப் பார்க்க

● 1 தொடக்கம் **30** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான **சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத்** தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

1. தென்மாகாணத்தில் உள்ள மொத்தப் பாடசாலைகளின் எண்ணிக்கை அண்ணளவாக
   (1) 1000 (2) 1100 (3) 1200 (4) 1300 (.........)

2. குறித்தவொரு பாடசாலையில் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 1200 ஆகும். அங்கு தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையிலான வகுப்புகள் நடைபெறுகின்றன. உயர்தரத்தில் கலை மற்றும் வணிகப்பாடத் துறைகளும் உள்ளன. அந்தப்பாடசாலை எந்த வகைக்கு உட்படும்?
   (1) 1 A (2) 1 AB (3) 1 C (4) II (.........)

3. மாகாண சபை பாடசாலைகள் என்ற பெயரில் வகைப்படுத்தல்கள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள எந்த வருடத்தில் செய்யப்பட்ட அரசியலமைப்பு மறுசீரமைப்பின் மூலம் ஏற்பட்டது?
   (1) 1972 (2) 1978 (3) 1988 (4) 2006 (.........)

4. மாகாண சபையொன்றில் சனாதிபதியினது பிரதிநிதியான நிறைவேற்று அலுவலர்
   (1) முதல் அமைச்சர்
   (2) பிரதம செயலாளர்
   (3) முதலமைச்சரினது செயலாளர்
   (4) மாகாண ஆளுநர் (.........)

5. மாகாண சபைக்குரிய பாடசாலையொன்று தேசிய பாடசாலையொன்றாகத் தரமுயர்த்தப்படுவது
   (1) மாகாணத்தின் முதலமைச்சரினாலாகும்.
   (2) மாகாணத்தின் கல்வி அமைச்சரினாலாகும்.
   (3) மாகாணத்தின் ஆளுநரினாலாகும்.
   (4) மத்திய கல்வி அமைச்சினது கல்வி அமைச்சரினாலாகும். (.........)

www.uplankajobs.lk

6. மாகாண சபை பாடசாலைகளில் ஆசிரியர்களின் தனிப்பட்ட கோப்புகள் பேணப்படுவது
   (1) மாகாண கல்வித் திணைக்களத்தில் ஆகும்.
   (2) வலயக் கல்வி அலுவலகத்திலாகும்.
   (3) கோட்டக் கல்வி அலுவலகத்திலாகும்.
   (4) மாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்திலாகும். (.........)

7. வலயமொன்றில் அமைந்துள்ள ஆசிரியர் மத்திய நிலையத்தின் தலைவராக நியமிக்கப்பட வேண்டியவர்
   (1) ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் அலுவலர் ஒருவர்
   (2) இலங்கை கல்வி நிர்வாக சேவையின் அலுவலர் ஒருவர்
   (3) இலங்கை அதிபர் சேவையின் அலுவலர் ஒருவர்
   (4) ஆசிரியர் ஆலோசகர் ஒருவர் (.........)

8. பிள்ளையொருவரை பாடசாலைக்குச் சேர்க்கும்போது அவசியமான ஆவணமொன்றாக அமைவது
   (1) மாணவர்களின் பாடசாலை விடுகைப் பத்திரம்
   (2) மாணவர்களின் பிறப்புச் சான்றிதழ் பத்திரம்
   (3) பெற்றோர்களின் வதிவிடம் தொடர்பாக கிராம அலுவலரினது சான்றிதழ்
   (4) பிள்ளையின் பாதுகாவலரின் பிறப்புச் சான்றிதழ் (.........)

9. கீழே குறிப்பிடப்பட்டவர்களில் பாடசாலை அபிவிருத்தி சபையில் உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்ள **முடியாதவர்கள்**
   (1) பிள்ளையினது பெற்றோர்
   (2) பிள்ளையினது சட்டபூர்வமான பாதுகாவலர்கள்
   (3) பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்கள்
   (4) பாடசாலையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ள ஆசிரியர்கள் (.........)

/பக் 3 ஐப் பார்க்க

10. பாடசாலையொன்றின் பிள்ளைகள் கல்விச் சுற்றுலாவிற்குச் செல்ல வேண்டுமெனின் அதற்கான அங்கீகாரத்தைப் பெற வேண்டியது
    (1) அந்தப் பாடசாலையின் அதிபரிடமிருந்தாகும்.
    (2) கோட்டக் கல்விப் பணிப்பாளரிடமிருந்தாகும்.
    (3) வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்தாகும்.
    (4) கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்தாகும். (………)

11. பாடசாலையொன்றினது சிற்றுண்டிச்சாலையை நிர்வகிப்பவர்
    (1) அதிபர்
    (2) அதிபரினால் பெயரிடப்படும் ஆசிரியர் ஒருவர்
    (3) கோட்டக் கல்விப் பணிப்பாளரின் பிரதிநிதி ஒருவர்
    (4) பாடசாலை சிற்றுண்டிசாலை குழு (………)

12. பாடசாலையொன்றில் மாணவர்களினது வைத்திய பரிசோதனை நடாத்தப்படுவது
    (1) சுகாதாரம் மற்றும் போசாக்கிற்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளரினாலாகும்.
    (2) பிரதேசத்தின் சுகாதார வைத்திய அலுவலரினாலாகும்.
    (3) அண்மித்த வைத்தியசாலையின் வைத்தியரினாலாகும்.
    (4) கோட்டத்தின் குடும்ப சுகாதார அலுவலரினாலாகும். (………)

13. உதவி பெறும் பாடசாலைகள் அரசினால் பொறுப்பேற்கப்பட்ட வருடம்
    (1) 1956 (2) 1960 (3) 1972 (4) 1981 (………)

14. பாடசாலைகளை அரசு சுவீகரித்த சந்தர்ப்பத்திலே அரசினால் சுவீகரிக்கப்படாத போதும் அரசின் உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படும் பாடசாலைகளின் பெயர்
    (1) விசேட கல்விக்கான பாடசாலைகள்
    (2) முதலாம் தர உதவி பெறும் பாடசாலைகள்
    (3) சமய தாபனங்களுக்குரிய பாடசாலைகள்
    (4) சர்வதேச பாடசாலைகள் (………)

www.uplankajobs.lk

15. பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக சீருடைகள் வழங்குவது ஆரம்பிக்கப்பட்டது எந்த சனாதிபதியின் நிர்வாகத்தின் கீழாகும்?
    (1) ஜனாதிபதி வில்லியம் கோபல்லாவ
    (2) ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா
    (3) ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா
    (4) ஜனாதிபதி டி.பீ.விஜயதுங்க (………)

16. கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிஞர்களுள் பாடசாலை பரிசோதகராகக் கடமையாற்றியவராக இருப்பவர் யார்?
    (1) மாட்டின் விக்ரமசிங்க (2) முனிதாச குமாரதுங்க
    (3) பியதாச சிறிசேன (4) அரிசன் அகுபுது (………)

17. பின்வரும் கல்வி அமைச்சர்களில் தென்மாகாணத்தைச் சேர்ந்த கல்வி அமைச்சர்கள் யார்?
    (1) திரு.சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா, திரு. ரிச்சட் பத்திரன, திரு. வி.ஜே.மு.லொக்குபண்டார
    (2) திரு. விஜயானந்த தஹநாயக்க, திரு. பதியுதீன் மொகமட், திரு. பி.பீ.ஜே.கலுகல்ல
    (3) திரு. சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா, திரு. விஜயானந்த தஹநாயக்க, திரு. ரிச்சட் பத்திரன
    (4) திரு. விஜயானந்த தஹநாயக்க, திரு. ரிச்சட் பத்திரன, திரு. நிஸங்க விஜேரத்ன (………)

18. இலவச கல்விச் சட்டம் நிறைவேற்றப்பட்ட வருடம் எது?
    (1) 1939 (2) 1947 (3) 1953 (4) 1962 (………)

19. வசதிக் கட்டணம் என்ற வகையில் மாணவன் ஒருவரிடமிருந்து மாதமொன்றிற்கு அறவிடப்படக்கூடிய உயர்ந்த பட்ச பணம் எவ்வளவு?
    (1) 3.00 ரூபாய் (2) 5.00 ரூபாய் (3) 8.00 ரூபாய் (4) 10.00 ரூபாய் (………)

/பக் 4 ஐப் பார்க்க

20. பின்வருவனவற்றுள் கல்வி அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்களுள் கல்விமாணி பட்டத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய நிறுவனம் / நிறுவனங்கள் எவை?
   (1) தேசிய கல்விக் கல்லூரிகள்
   (2) ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள்
   (3) தேசிய கல்வி நிறுவகம்
   (4) இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
   (.........)

21. தேசிய கல்விக் கல்லூரிகளுக்குப் பொறுப்பாக உள்ள கல்வி அமைச்சின் அலுவலரின் பதவிப் பெயர் என்ன?
   (1) ஆசிரியர் கல்வி தொடர்பான கல்விப் பணிப்பாளர்
   (2) பிரதம ஆணையாளர் - ஆசிரியர் கல்வி
   (3) கல்விப் பணிப்பாளர் நாயகம்
   (4) மேலதிக செயலாளர் ஆசிரியர் கல்வி
   (.........)

22. தேசிய கல்வி நிறுவக சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு யாது?
   (1) 1980 (2) 1985
   (3) 1991 (4) 1996
   (.........)

23. க.பொ.த (சா.தர) வகுப்புக்கான பாடத்திட்டத்தில் பிரதான பாடங்களின் எண்ணிக்கை எவ்வளவு?
   (1) 3 (2) 4
   (3) 6 (4) 8
   (.........)

24. இரு மொழி கல்வி வேலைத் திட்டத்தின் கீழ் ஆங்கில மொழிகளில் கற்பிக்க **முடியாத** பாடம் யாது?
   (1) சுகாதாரமும் உடற்கல்வியும் மற்றும் வரலாறும்
   (2) சமயம் மற்றும் சமூகக்கல்வி
   (3) வரலாறு மற்றும் புவியியல்
   (4) சமயம் மற்றும் வரலாறு
   (.........)

25. க.பொ.த(உ.தர) வகுப்புகளிலே தொழில்நுட்பவியல் பாடத்துறையை பயிலும் மாணவர்களால் தொழில்நுட்பவியல் பிரிவுகள் இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யமுடியும். அந்த **இரு** தொழில்நுட்ப பிரிவுகளும் எவை?
   (1) பொறியியற் தொழில்நுட்பம், உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்
   (2) பொறியியற் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம்
   (3) விவசாய தொழில்நுட்பம், மின்னியல் தொழில்நுட்பம்
   (4) உயிர்முறைமைகள் தொழில்நுட்பம், நிர்மாணத் தொழில்நுட்பம்
   (.........)

26. அவசர நிலைமைகளில் பிள்ளைகளுக்கு உதவி செய்வதற்காக நிறுவப்பட்டுள்ள ஐக்கிய நாடுகளின் விசேட நிறுவனம் யாது?
   (1) யுனிசெப் (UNICEF)
   (2) ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத் திட்டம் (UNDF)
   (3) யுனெஸ்கோ (UNESCO)
   (4) உலக சுகாதார அமைப்பு (WHO)
   (.........)

27. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தெரிவுகளுள் கல்வி உளவியலாளர்களின் பெயர்களை மட்டும் உள்ளடக்கப்பட்டுள்ளது யாது?
   (1) சிக்மன் பிரொயிட், கார்ள் யங், இவான் பவ்லோ
   (2) ஜீன் பியாஜே, ஏபிரகாம் மாஸ்லோ, பீ.எப்.ஸ்கினர்
   (3) பிளேட்டோ, ஜீன் ரூசோ, ரவீந்திரநாத் தாஹுர்
   (4) லியோ டோல்ஸ்டோய், கீ த மொபசாங், பேட்ரன் ரசல்
   (.........)

28. கீழே குறிப்பிடப்பட்டவர்களுள் இலங்கை கல்வித் துறையில் உன்னதமான சேவையை செய்தவர்களை மட்டும் கொண்ட தெரிவு எது?
   (1) ஜே.ஈ.ஜயசூரிய, பிரேமதாச உடகம, போகொட பிரேமரத்ன
   (2) டபிள்யூ.ஏ.சில்வா, ஜீ.பீ.சேனாநாயக்கா, மஹகம சேகர
   (3) சீ.பி.தனபால, ஏர்னஸ்ட் கோரயா, சந்திரரத்ன மானவசிங்க
   (4) ஆனந்த சமரக்கோன், குனசேன கலப்பதி, சுனில் சாந்த
   (.........)

www.tamilkajobs.lk

/பக் 5 ஐப் பார்க்க

29. கீழே குறிப்பிடப்பட்ட காலப்பகுதிகளில் இலங்கையில் முக்கியமான கல்வி சீர்திருத்தங்கள் ஏற்பட்ட காலப்பகுதியைக் குறிப்பிடும் தெரிவு யாது?
   (1) 1920 - 24 , 1948 - 49 , 1966 - 67
   (2) 1934 - 35 , 1941 - 42 , 1969 - 70
   (3) 1943 - 45 , 1960 - 61 , 1980 - 81
   (4) 1952 - 53 , 1976 - 77 , 1989 - 90 (………)

30. ஆசிரியர் ஒருவர் தனது கற்பிக்கும் பணியைச் சுயமாக விருத்தி செய்து கொள்வதற்காக செய்ய வேண்டியது
   (1) கல்வி உளவியல் தொடர்பான புத்தகங்களை மனனஞ் செய்தல்
   (2) ஏனைய ஆசிரியர்களுடன் பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடல்
   (3) மாணவர்களுக்கு பிரதி பண்ணிக் கொள்வதற்காக குறிப்புகளை தயாரித்துக் கொள்ளல்.
   (4) தான் கற்ற பாடங்களை மீண்டும் சிந்தித்து குறைபாடுளை சீராக்கிக் கொள்ளல் (………)

● **31** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின் மீது சுருக்கமாக** எழுதுக.

31. பாடசாலைகளில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகள் தொடர்பான குறிப்புகளை பதிவு செய்யும் முக்கிய ஆவணம் யாது?

………………………………………………………………………………

32. பாடசாலையொன்றில் கல்விசாரா ஊழியர் வகைக்குள் அடங்குபவர்கள் யார்?

………………………………………………………………………………

………………………………………………………………………………

33. பாடசாலையொன்றில் மாணவர்களின் எண்ணிக்கை குறித்த எண்ணிக்கையை விட அதிகரித்தால் எல்லாப் பிள்ளைகளுக்கும் மதிய உணவு வழங்கப்படும். அந்த எண்ணிக்கை யாது?

………………………………………………………………………………

34. ஜப்பான் நாட்டின் உதவியுடன் நிறுவப்பட்ட தென்மாகாணத்திலே கல்விக் கல்லூரி யாது?

………………………………………………………………………………

35. க.பொ.த(உயர்தர) பரீட்சையின் போது மாணவன் ஒருவன் பெற்ற புள்ளியானது பல்கலைக்கழக அனுமதிக்காக நியமப்படுத்தப்படும். அவ்வாறு நியமப்படுத்திய புள்ளி எப்பெயரால் அழைக்கப்படும்?

………………………………………………………………………………

36. கல்வி அமைச்சு அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை அபிவிருத்தி வேலைத் திட்டம் எப்பெயரினால் அழைக்கப்படுகிறது?

………………………………………………………………………………

37. தொழில்நுட்பவியல் தொடர்பாக மட்டும் பட்டத்தை வழங்குவதற்காக நிறுவப்பட்டுள்ள பல்கலைக்கழகம் யாது?

………………………………………………………………………………

38. இலங்கையின் நூலகங்களில் புத்தகங்களை வகைப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் குறியீட்டு முறைக்கு வழங்கப்படும் பெயர் யாது?

………………………………………………………………………………

39. இலங்கையில் உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி நடைபெறும் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களுக்குப் பொறுப்பாக கடமையாற்றும் தேசிய மட்ட நிறுவனம் யாது?

………………………………………………………………………………

www.uplankajobs.lk

/பக் 6 ஐப் பார்க்க

40. பாகிஸ்தானின் சிறுமி ஒருவர் நாட்டின் பெண்களின் கல்விக்காக சேவையாற்றியமைக்காக தீவிரவாதிகளின் கோபத்திற்கு உள்ளானார். எனினும் அவர் வேறு நாட்டிற்குச் சென்று தனது சேவைகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டமையினால் அவருக்கு நோபல் பரிசு கிடைக்கப் பெற்றது. அவரது பெயர் என்ன?

.............................................................................................................................................

41. தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பாடமொன்றை விளக்குவதற்குப் பயன்படுத்தக்கூடிய உபகரணம் யாது?

.............................................................................................................................................

42. கடந்த இரு தசாப்தங்களில் இலங்கையிலே கல்விக்காக அதிகளவில் உதவியை வழங்கிய இரண்டு சர்வதேச முகவர் நிறுவனங்கள் உள்ளன. அதில் **ஒன்றைப்** பெயரிடுக.

.............................................................................................................................................

43. பாடசாலை முகாமைத்துவத்திலே பாடசாலை சமூகத்தின் தொடர்பை மேம்படுத்துவதற்காக கல்வி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாது?

.............................................................................................................................................

44. இந்நாட்டிலே சாரணர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய உயர் விருது யாது?

.............................................................................................................................................

45. இலங்கை அரசாங்க பாடசாலைகளில் ஆரம்ப பிரிவுகளிலே கற்பித்தல் ஊடகமாகப் பயன்படுத்தப்படும் மொழிகள் யாவை?

.............................................................................................................................................

46. கீழே தரப்பட்டுள்ள வசனத்தைப் பூரணப்படுத்துக.

"லீவு என்பது ஆசிரியர் ஒருவரினது உரிமை அன்று அது ..................................................................."

www.aplankajobs.lk

47. இடமாற்றத்திற்கு உட்படும் அரச சேவைகள் தொடர்பாக அரச ஊழியர் ஒருவருக்கு கடமை நிலையம் ஒன்றிலே இருக்கக்கூடிய உச்ச கால எல்லை எத்தனை வருடங்களாகும்?

.............................................................................................................................................

48. கட்டாயமாக பிள்ளையொருவர் பாடசாலையில் இருக்க வேண்டிய வருடங்களின் எண்ணிக்கை தொடர்பாக அரசு அண்மையில் கொள்கையொன்றைத் தீர்மானித்தது. அதற்கேற்ப அந்த வருடங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

.............................................................................................................................................

49. பாடசாலை அபிவிருத்தி சபையொன்றில் உறுப்புரிமைக் கட்டணத்தைச் செலுத்தாது உறுப்புரிமையை பெற்றுக் கொள்ளக்கூடியவர்கள் யார்?

.............................................................................................................................................

50. இடை நிலை பாடசாலை மாணவர்கள் தமது திறமை மற்றும் தொழில்சந்தைகளில் உள்ள தொழில்வாய்ப்புக்களை அறிந்து கொள்வதற்காக பாடசாலைகளில் செயற்படுத்தப்படும் வேலைத் திட்டம் யாது?

.............................................................................................................................................

* * *